திரு. செ. சதாசிவம் : தலைவரவர்களே, அந்தச் சங்கத்திலே பணி புரிபவர்கள் நிரந்தரமாக்கப்பட்டவர்களா ? அல்லது தற்காலிகமாக வைக்கப்பட்டவர்களா ? நிரந்தரமாக வைக்கப்பட்டவர்கள் என்றால் தொடர்ந்து அவர்களுக்கு சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அந்த அமைப்பே ஒரு அலுவல் சார்பற்ற அமைப்பு.

நாகைப்பட்டினத்தில் வீட்டு வசதித் திட்டம்.

* வினா எண். 506—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகைக்கு வீட்டு வசதித் திட்டத்தினை விரிவுபடுத்தக் கோரி நாகை வாசிகள் சங்கம் அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும்

(ஆ) இல்லை.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, நாகைப்பட்டினத்திலே அரசாங்கத்தினுடைய பல்வேறு இலாக்காக்கள் ஹெட்குவார்ட்டர்ஸ் ஆபீஸ்கள் இருக்கின்றன, மேலும் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அங்கேயிருக்கிற ஸ்டாபுக்கும் ஆபீஸர்களுக்கும் வீடு இல்லாமல் ரொம்பக் குறைவாக இருக்கிறது. ஆகவே, நைபர்ஹுட் ஸ்கீம் போன்ற, ஏதாவது ஸ்கீம் ஏற்பாடு செய்ய அரசாங்கத்திடம் உத்தேசம் உண்டா ? ஸ்கீம் உண்டு என்றால், அதனுடைய டிடெய்ல்ஸ் என்ன ? எப்பொழுது ஆரம்பிப்பார்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அரசு ஊழியர்களுக்கும் வீடு உண்டு, நைபர்ஹுட் ஸ்கீமிலும் உண்டு. தமிழ் நாடு அரசு அலுவலர்களுக்கு 90 வீடுகள் ரூ. 23.60 இலட்சங்கள் செலவில் கட்டப்பட்டு வருகின்றன. 12 வீடுகள் முடியும் தருவாயில் உள்ளன. மீதமுள்ளவை 3 மாதங்களில் முடியும்.

1979 மார்ச் 22]

நாகை புறநகர் அமைக்கும் திட்டம் வீட்டு வசதி வாரியத் திடம் உள்ளது. இத் திட்டத்தின்படி நாகையில் 11.25 ஏக்கர் நிலத்தை ரூ. 11.48 இலட்சம் செலவில் கையகப்படுத்தி, அவ் வாறு கையகப்படுத்தப்பட்ட நிலத்தைக் குடிநீர் வசதி, மின் வசதி, சாலை வசதி மற்றும் பல வசதிகளுடன் மேம்படுத்தி வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் நாகையில் 262 வீடுகள் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் வேளாங் கன்னியில் 164 வீடுகள் மீனவர்களுக்கும் ரூ. 40.17 இலட்சங்கள் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

கோவை தொழிலாளர் மையப் படிப்பகம்

*வினா எண். 507—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை போன்ற பெரிய தொழிலாளர் மையத்துக்கு மேலும் ஒரு படிப்பகம் ஏற்படுத்தும் உத்தேசமுள்ளதா ?

(ஆ) விஞ்ஞானம், தத்துவம், கலை, இலக்கிய புத்த கங்களையும் போடும் திட்டமுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) தற்சமயம் இல்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சர்களுக்கு நன்றாகத் தெரியும், சென்னைக்கடுத்தப்படியாக, ஒரு பெரிய ஒர்க்கிங் கிளாஸ் சென்டர் கோயம்புத்தூர். வசூலிக்கப்பட்டி ருக்கக்கூடிய அந்தப் பணம் ஏராளமாக கையிலே இருக்கிறது. அந்த இடத்தில் தொழிலாளர்கள் புத்தி கூர்மையோடு விஷயங்களைக் கற்றுக்கொள்ள ஒரு நல்ல லைப்ரரி—மத்திய லைப்ரரியாக ஏற்படுத்த—நூலகம் ஏற்படுத்த ஏன் திட்டம் போடப்படவில்லையென்பதை நான் கேட்கவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது படிப்பகம் ஒன்று ஏற்கெனவே இருக்கிறது. மேலும் தேவை என்று சொன்னால், நமது மாண்பு மிகு உறுப்பினர் அருமை நண்பர் திரு. உமாநாத் அவர்களை உறுப்பினராக கொண்ட 20 பேர் அடங்கிய குழு ஒன்று இருக் கிறது. அவர்கள் மூலமாகவே இதைக் குழுவில் கொண்டு வந் தால் முடிவு எடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.